# ஏற்கெனவே தமிழ்நாட்டை அடகு வைத்தவர் பழனிசாமி!

## ஆண்டிப்பட்டியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 5–ஆம் பக்கத் தொடர்ச்சி!



அந்த இலட்சணத்தில் அவர் என்ன சொல்கிறார்? ஆட்சிக்கு வந்தால் பா.ஜ.க.விடம் கோரிக்கை வைத்துத் திட்டங்களைக் கொண்டு வருவாராம்... கேட்கும்போதே உங்களுக்கெல்லாம் சிரிப்பு வருகிறதல்லவா? ஏற்கனவே முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டின் உரிமைகளை எல்லாம் அடகு வைத்த பழனிசாமி, இப்போது புலிப்பாண்டியாக மாறி அழுத்தம் தருவாராம்... நம்முடைய ஊரில் சொல்வார்கள் அல்லவா... “அறுக்கத் தெரியாதவனுக்கு 52 அருவா”! இது பழனிசாமிக்காக உருவான பழமொழி!

நம்முடைய அண்ணன் ஓ.பி.எஸ் அவர்களிடம் கேளுங்கள், இன்னும் நிறையத் துரோகங்களைச் சொல்வார் அவர்.

பிரசாரத்தில் இருக்கும் தம்பி உதயநிதி ஒரு ஃபோட்டோவைக் காட்டுவதை ஊர் ஊராக பார்த்துக் கொண்டிருப்பீர்கள் நீங்கள். ஏன், பழனிசாமியின் அந்த பர்ஃபார்மென்ஸை லைவ்லேயே நீங்கள் எல்லோரும் டி.வி.-யில் பார்த்திருப்பீர்கள்...

அம்மையார் சசிகலா காலில் விழுந்து, அவருடைய காலை வாரிவிட்டுத் துரோகத்தைச் செய்தவர். இப்போது ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கும் துரோகம் செய்து கொண்டு இருக்கிறார்.

பழனிசாமி மட்டுமல்ல. அந்தத் துரோகக் கூட்டத்தில் இன்னொரு துரோகியும் இருக்கிறார். அவரைப் பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஊழல் வழக்கில் பல சட்டங்கள் இருப்பதை நாட்டுக்கே அறிமுகப்படுத்திய உத்தமர் அவர்! உலகத்திலேயே தேர்தல் ஆணையத்திற்கு லஞ்சம் கொடுக்கப் பார்த்துத் திகார் ஜெயிலுக்கு டூர் சென்றவர் அவர்! இப்போது தெரிந்திருக்கும் அவர் யார் என்று... “பழனிசாமியுடன் கூட்டணி வைத்துக் கொண்டால் தூக்கு மாட்டிக் கொள்வேன்” என்று சொன்னார். இன்னொருவர் காலில் விழுந்த பழனிசாமியிடம் இப்போது சரண்டர் ஆகியிருக்கிறார். அவரைப் பற்றிப் பேச முடியுமா? இப்படிப்பட்ட இலட்சணத்தில்தான் N.D.A. கூட்டணி இருக்கிறது!

### சுயமரியாதை மிக்க நம்முடைய கூட்டணி!

பா.ஜ.க.வுக்குப் பல்லக்குத் தூக்கும் இந்தத் துரோகிகளுக்கு, இந்தியைத் திணித்தாலும் கவலை இல்லை; நீட் தேர்விலிருந்து விலக்கு தரவில்லை என்றாலும் கவலை இல்லை; கல்வி நிதியை நிறுத்தினாலும் கவலை இல்லை; தமிழ்நாட்டிற்கான நிதியை நிறுத்தினாலும் கவலை இல்லை; நூறு நாள் வேலைத்திட்டத்திற்கு மூடுவிழா நடத்தினாலும் கவலை இல்லை; பேரிடர் இழப்பீடு நிதியைக் கொடுக்கவில்லை என்றாலும் கவலை இல்லை; இஸ்லாமிய மக்களின் வக்பு சொத்துகளைப் பறித்தாலும் கவலை இல்லை; கிறிஸ்தவர்களுக்கு எதிரான F.C.R.A. சட்டம் கொண்டு வந்தாலும் கவலை இல்லை; இப்போது நாடே கொந்தளிக்கும் தொகுதி மறுசீரமைப்பில்கூட, பா.ஜ.க.வை எதிர்த்துப் பேசுவதற்குத் தெம்போ – திராணியோ – துணிச்சலோ இல்லாமல், தமிழ்நாட்டு உரிமைகளை எல்லாம் அடகு வைக்கும் அரசியல் அவமானமாக இருக்கிறார்கள்!

ஆனால், தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி என்பது, உரிமைக்காகப் போராடும் போர்க்குணம் நிறைந்த சுயமரியாதைமிக்க கூட்டணி! அதனால்தான், டீ–லிமிட்டேஷன் என்ற பெயரில் தமிழ்நாட்டின் கழுத்தில் கத்தியை வைக்கிறார்கள் என்று தெரிந்ததும் தேர்தல் பிரசாரத்தை பிறகு பார்த்துக் கொள்ளலாம்; முதலில், நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் அரசியல் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று சொல்லி, நம்முடைய எம்.பி.-க்களையெல்லாம் டெல்லிக்கு அனுப்பி வைத்திருக்கிறேன். அதனால், தங்க தமிழ்ச்செல்வன் அவர்கள் இந்த மேடைக்கு வர முடியவில்லை. அவரை நான்தான் அனுப்பி வைத்திருக்கிறேன். சென்றே தீர வேண்டும் அனுப்பி வைத்திருக்கிறேன். டெல்லிக்குச் சென்று அங்கு கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கு தமிழ்நாட்டில், தேர்தல் பிரசாரத்திற்கு இடையிலும், நான் உட்பட தமிழ்நாடு முழுவதும் சுயமரியாதைமிக்க நம்முடைய கூட்டணி சார்பாக, கருப்புக் கொடியை ஏற்றுகிறோம். தொகுதி மறுசீரமைப்பு மசோதா நகலை எரித்து நம்முடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறோம். தமிழ்நாட்டு உரிமைக்காகப் போராடும் இந்த ஸ்டாலினின் கரங்களை நீங்களெல்லாம் வலுப்படுத்துவீர்களா? தமிழ்நாட்டின் தன்மானத்திற்காக என்னோடு சேர்ந்து தேனி மக்கள் போர் செய்வீர்களா?

ஏனென்றால், இந்தப் போரில் வெற்றி பெற்றால்தான், எதிர்காலத்தில் நம்முடைய தமிழ்நாடு – தமிழ்நாடாக இருக்கும். இல்லை என்றால், தட்சிணப் பிரதேசத்திலேயோ – யூனியன் பிரதேசத்திலேயோ நாம் உரிமையே இல்லாமல் இருப்போம்! இந்த நிலை ஏற்படாமல் தமிழ்நாடு தலைநிமிர்ந்தே இருக்க வேண்டும் என்றுதான், நாட்டுக்கே வழிகாட்டியாகத் திராவிட மாடல் அரசை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

### வரலாறு காணாத வளர்ச்சியை உருவாக்கியுள்ளோம்!

0.07 விழுக்காடு வளர்ச்சி என்ற நிலையிலிருந்து பழனிசாமி படுகுழியில் தள்ளித் பரிதவிக்க விட்டுச்சென்ற தமிழ்நாட்டை மீட்டெடுத்து, இப்போது நாம் 11.19 விழுக்காடு என்ற வரலாறு காணாத வளர்ச்சியை உருவாக்கியிருக்கிறோம்.

இந்த வளர்ச்சிக்கு அடித்தளமான சாதனைகளில் சிலவற்றை மட்டும் நான் சொல்லட்டுமா?

ஆட்சிப் பொறுப்புக்கு முதல் நாள், முதல் கையெழுத்து – மகளிர் அனைவரும் கட்டணமில்லாமல் விடியல் பயணம் செய்யலாம் என்று உத்தரவிட்டேன்.

ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாயை வழங்கிக் கொண்டிருக்கும், “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்” – இனி, உங்களுடைய உரிமைத் தொகை, ஆயிரம் அல்ல... நான் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு இரண்டாயிரம் ரூபாயாக உயரப் போகிறது!

அரசுப் பள்ளியில் படித்து, கல்லூரி செல்லும் மாணவ – மாணவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும், புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம், இனி இந்தத் தொகை ஆயிரம் அல்ல... ஆயிரத்து 500 ரூபாயாக உயரப் போகிறது!

19 இலட்சம் பள்ளி மாணவர்கள் சூடாக – சுவையாகச் சத்தான உணவை வழங்கும் திட்டம், “காலை உணவுத் திட்டம்” – இந்தத் திட்டத்தை இப்போது ஐந்தாம் வகுப்பு வரை வழங்குகிறோம். இனி, எட்டாம் வகுப்பு வரைக்கும் விரிவாக்கம் செய்யப் போகிறோம்!

மக்களைத் தேடி மருத்துவம்!

இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48!

நான் முதல்வன்!

தோழி விடுதி!

கலைஞர் கைவினைத் திட்டம்!

கலைஞர் கனவு இல்லம் என ஏராளமான திட்டங்கள் இருக்கிறது.

### அடுத்த கட்ட வளர்ச்சிக்கு களமிறங்கியுள்ளோம்!

2021-இல் திராவிட மாடல் ஆட்சிக்காக, உங்களுடைய ஆதரவைக் கேட்டு வந்தபோது நான் சொன்னேன். அடுத்த பத்தாண்டுகளுக்கான தொலைநோக்குப் பார்வையை உறுதிமொழிகளாகக் கொடுத்துவிட்டுத்தான் உங்களிடத்தில் வாக்குக் கேட்டேன். அந்த அடிப்படையில், தமிழ்நாட்டின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு களமிறங்கியிருப்பது யாரு? யார் அந்த சூப்பர்ஸ்டார்! தேர்தல் அறிக்கை! “சூப்பர் ஸ்டாரு யாருனு கேட்டா...” சின்னக் குழந்தைகள் கூடச் சொல்லும். அதுதான் நம்முடைய தேர்தல் அறிக்கை!

அதில் என்னென்ன ஹைலைட்? இங்கு இருக்கும் மகளிரைக் கேட்கிறேன்... உங்கள் அண்ணன் – இந்த ஸ்டாலின் கொடுக்கப் போகும் கூப்பன் எவ்வளவு? எட்டாயிரம் ரூபாய் (மகளிர்)! மகளிர் எல்லாம் இப்போதே வீட்டுக்கு என்ன புதுப் பொருள் வாங்கலாம் என்று டிஸ்கஸ் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்! இந்தக் கூப்பனை வைத்து, உங்களுக்குத் தேவைப்படும் வீட்டு உபயோகப் பொருளை, புதியதாகவும் வாங்கிக் கொள்ளலாம்; இல்லை என்றால், பழைய பொருளை எக்ஸ்சேஞ்ச் செய்து புதிய பொருளையும் வாங்கிக் கொள்ளலாம்! உங்களுக்குப் பிடித்த கடையில் – உங்களுக்குப் பிடித்த பிராண்ட்–ஐ வாங்கிக் கொள்ளலாம்!

அடுத்து, 20 இலட்சத்திற்கும் அதிகமான உழவர்கள் பயன்பெறும் வகையில், நவீன மின்சாரப் பம்புசெட்டுகளை வழங்கப் போகிறோம்!

உயர்கல்வி முடித்த 5 இலட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில், நான் முதல்வன் திட்டத்தில் ஆயிரத்து 500 ரூபாய் உதவித்தொகையோடு 6 மாதம் பயிற்சி வழங்கப் போகிறோம்.

பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

முதியோர் உதவித்தொகை ஆயிரத்து 200 ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.

மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப்படும்.

2030–ஆம் ஆண்டுக்குள் மாவட்ட மற்றும் வட்ட அளவிலான அரசு மருத்துவமனைகளில் டயாலிசிஸ் சிகிச்சைக்கான கருவிகள் இரண்டு மடங்காக்கப்படும்.

கலைஞர் கனவு இல்லம் உள்ளிட்ட திட்டங்கள் மூலமாக வீடற்ற ஏழைகளுக்கு அடுத்த 5 ஆண்டுகளில் 10 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும்.

இவைபோக, இங்கே வந்தவுடனே என்னிடம் வைக்கப்பட்ட சில கோரிக்கைகளின் அடிப்படையில், தேனி மாவட்ட மக்களுக்கான வாக்குறுதிகளை இப்போது நான் அளிக்கப் போகிறேன்.

ஏலக்காய் உற்பத்தி பெருமளவு நடைபெறும் இந்தத் தேனி மாவட்டத்தில், ஏலக்காய் தொழிலுக்கான பொது வசதி மையம் பண்ணைபுரத்தில் அமைக்கப்பட உள்ளது.

போடிநாயக்கனூர் பகுதியிலும் இத்தொழில் சிறப்பாக நடைபெறுவதால், மேலும் ஒரு “மைக்ரோ க்ளஸ்டர்” போடிநாயக்கனூரில் அமைக்கப்படும்.

கம்பம் தொகுதி, சின்னமனூர் ஒன்றியத்தில் உள்ள விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, வேளாண்மைக்கு தேவையான தண்ணீர் கொண்டு செல்லப்படும்.

கம்பம் உத்தமபாளையம் அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் உண்டு உறைவிடப் பள்ளி தொடங்கப்படும்.

மேலும், தென்மாவட்டங்களுக்கான சிறப்பு வளர்ச்சித் திட்டம்.

தேனியில் வேளாண் தொழில் பூங்கா ஒன்று உருவாகப் போகிறது.

நான் இவ்வளவு நேரம் கூறியதெல்லாம் கொஞ்சம்தான். தேர்தல் அறிக்கை புத்தகத்தில் இன்னும் ஏராளமாக இருக்கின்றன.

வழிகாட்டும் தெற்கை வஞ்சிக்கலாமா ஒன்றிய அரசு!

இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் “வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது” என்று இருந்த நிலையை மாற்றி, “தெற்கு தான் வழிகாட்டுகிறது” என்ற நிலையை உருவாக்கி இருக்கிறோம். அப்படி வழிகாட்டும் தெற்கை ஒன்றிய அரசு வஞ்சிக்கலாமா?

மக்களாகிய நீங்கள், இந்தத் தேர்தலில் தெளிவாக முடிவெடுக்க வேண்டும்! இந்தத் தேர்தலில், பழனிசாமியின் அ.தி.மு.க.வுக்கும் – பா.ஜ.க.வுக்கும் விழும் ஒவ்வொரு வாக்கும், தமிழ்நாட்டை நாசப்படுத்த அவர்களுக்குக் கொடுக்கும் வாய்ப்பு! டபுள் எஞ்சின் – டப்பா எஞ்சின் என்று உள்ளே நுழைந்து, தமிழ்நாட்டைச் சிதைத்துவிடுவார்கள்.

ஏற்கெனவே, பழனிசாமி ஆட்சியில் என்னென்ன கூத்துகள் அரங்கேறியது? எப்படியெல்லாம் உரிமைகள் பறிபோனது? என்று நீங்கள் அனைவரும் பார்த்தீர்கள். அந்த அவமான நிலை மறுபடியும் உருவாக வேண்டுமா? தமிழ் மானத்தை அடகு வைக்கும் பழனிசாமிக்கு நாம் பாடம் புகட்ட வேண்டாமா?

கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். பழனிசாமி தமிழ்நாட்டை ஆட்சி செய்த நான்கு ஆண்டுகள் என்பது, ஊழல்களும் – மக்கள் விரோத நடவடிக்கைகளும் நிறைந்த, இருண்ட ஆட்சிக் காலம்!

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், அவருடைய ஆட்சியின் அடையாளங்கள் என்ன? பொல்லாத ஆட்சிக்குப் பொள்ளாச்சியே சாட்சி! துப்புக்கெட்ட ஆட்சிக்குத் தூத்துக்குடியே சாட்சி! கொடூரமான ஆட்சிக்குக் கொடநாடே சாட்சி! கேடுகெட்ட ஆட்சிக்குச் சாத்தான்குளமே சாட்சி என்று அனைத்துமே எதிர்மறையாகத்தான் இருக்கின்றன!

### அ.தி.மு.க. பா.ஜ.க.வுக்கு போடும் வாக்குகள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான தடைக்கற்கள்!

தவறுக்கு மேல் தவறுகள் செய்த பழனிசாமி, தன்னுடைய தவறுகளில் இருந்து தப்பிக்க சரண்டரான இடம்தான், பா.ஜ.க. வாஷிங்மெஷின்! தன்னுடைய தவறுகளில் இருந்து தப்பிக்க அவர் கொடுத்த விலைதான், தமிழ்நாட்டின் உரிமைகள்! அ.தி.மு.க.வுக்கு விழும் ஒவ்வொரு வாக்கும் பா.ஜ.க.வுக்கு விழும் வாக்குகள்! தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு விழும் தடைக்கற்கள்!

எனவே, தமிழ்நாட்டை வட்டமிடும் பா.ஜ.க. எனும் பருந்தை விரட்டியடிக்க வேண்டும்! அதனால்தான், நடக்கும் தேர்தல் தமிழ்நாடு வெர்சஸ் N.D.A. என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டிற்குத் துரோகம் செய்யும் பத்து தோல்வி பழனிசாமிக்கு, பதினோராவது தோல்வியைக் கொடுத்து, விரட்ட வேண்டும்! டெல்லியின் ரிமோட் கண்ட்ரோலுக்கு அடிமைகள் தமிழ்நாட்டில் ஆளக் கூடாது!

எனவே, தமிழ்நாடு வெற்றி பெற – தமிழ்நாடு, தமிழ்நாடாக இருக்க – நாம் தலைநிமிர்ந்து நடைபோட – மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும்.

அதற்கு, போடி தொகுதியில் அண்ணன் ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், கம்பம் தொகுதியில் கம்பம் ராமகிருஷ்ணன் அவர்களுக்கும், ஆண்டிபட்டி தொகுதியில் மகாராஜன் அவர்களுக்கும், உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியகுளம் தொகுதியில் சக்திவேல் என்கிற ஆற்றலரசு அவர்களுக்குப் பானை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தேர்தலில் பா.ஜ.க.வின் ஆணவத்திற்கும், அ.தி.மு.க.வின் துரோகங்களுக்கும் ஒருசேர முடிவுரை எழுதுவோம்!

தேனியில் நான் பேசிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு வெற்றிச் செய்தி வந்திருக்கிறது. நல்ல செய்தி வந்திருக்கிறது. தமிழ்நாட்டுக்கு எதிராக கருப்புச் சட்டம் கொண்டுவந்தார்கள் அல்லவா? அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டு, நாம் அதில் வெற்றி பெற்றிருக்கிறோம். இந்த வெற்றி வெறும் டிரெய்லர்தான், அடுத்து நாம் பெறவிருக்கும் வெற்றிதான் மாபெரும் வெற்றி. தமிழ்நாடா? டெல்லியா? என்று நான் கேட்டேன் அல்லவா? தமிழ்நாடா? டெல்லியா? (மக்கள் : தமிழ்நாடு)

### ஓய்வுக்கோ சோர்வுக்கோ இனி இடமே இல்லை!

தேர்தலுக்கு இன்னும் 5 நாட்கள்தான் இருக்கின்றன. ஒரு பக்கம் கோடைக்கால வெப்பம்! இன்னொரு பக்கம் தொகுதி மறுவரையறைக்கு எதிராக நாம் பற்ற வைத்த நெருப்பின் வெப்பம்! இதில் நாம் வெற்றிபெற்றுவிட்டோம். இதற்கு இடையில்தான் நம்முடைய உடன்பிறப்புகள் களத்தில் இறங்கிப் பிரசார பணிகளைச் செய்து கொண்டு இருக்கிறீர்கள். ஐந்தாண்டு ஆட்சி எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவுக்கு இந்த கடைசி 5 நாட்கள் போடும் உழைப்பும் ரொம்ப முக்கியம்!

ஓய்வுக்கோ, சோர்வுக்கோ இடமே இல்லை! ஏனென்றால், நாம் இந்தத் தேர்தலில் சும்மா ஜெயித்து ஆட்சிக்கு வந்தால் போதும் என்று வேலை செய்யவில்லை. 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற வேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு உழைப்பும்! தினமும் பல மணி நேரம் பேசிப் பேசி, கடைசி இரண்டு நாளாக எனக்கே தொண்டையில் சின்ன கரகரப்பு வந்துவிட்டது. ஆனால், அதற்காக, தலைவராக நான் ஆற்ற வேண்டிய பணியையும், தொண்டையும் நான் மறக்கவில்லை. ஒவ்வொரு உடன்பிறப்பும் அப்படித்தான்!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் இந்த நேரத்தில் சொல்லியே ஆக வேண்டும்! தொடர்ந்து உழைப்போம்! சரித்திர வெற்றியைப் பெறுவோம்! அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில் நம்முடைய சாதனைகளை நாமே முறியடிப்போம்!

தலைநிமிர்ந்த தமிழ்நாடு வளம் பெற நல்லாட்சி தொடர்ந்திட வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக!

தமிழ்நாடு வெல்லட்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.


நாடு வளம் பெற, நல்லாட்சி தொடர்ந்திட,
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை
ஆதரிப்பீர்!




# பா.ஜ.க.வை எதிர்த்துப் பேச தெம்பு - திராணியற்றவர் பழனிசாமி!